## கையடக்க தொலைபேசியும் இணையமும்

நன்மை தீமையறியாத உங்கள் பிள்ளைகளை கையடக்க தொலைபேசி அல்லது இணையத்தின் ஊடாக வரும் தீயவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

அவர்கள் உங்கள் பிள்ளைகளின் புகைப்படங்களை திரிபுபடுத்தி சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு அவர்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தலாம்.

இவ்வாறான சம்பவங்களினால் பாதிக்கப்படும் சிறுவர்கள் தற்கொலை செய்து கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

கையடக்க தொலைபேசியூடாக இணையத்தளத்திற்குள் பிரவேசிக்க முடியுமென்பதால் அங்குள்ள ஆபாச ஊடகங்களை சிறுவர்கள் தம்மை அறியாமலேயே பார்க்க நேரிடலாம்.

வயதுவந்தவராயினும் கையடக்க தொலைபேசியூடாக இணையத்தளத்தை பாவிப்பவராயின் தங்களது தனிப்பட்ட புகைப்படங்கள், தொலைபேசி இலக்கங்கள், அல்லது விபரங்களை அதில் சேமிக்க வேண்டாம்.

உங்களுடைய மிக முக்கியமான இரகசியங்களை மற்றவர்களோடு பகிர்தல் மற்றும் கலந்துரையாடலை தவிர்க்கவும்.







## சுற்றுலா துறையும் சிறுவர் துஷ்பிரயோகமும்

உங்கள் சொந்த ஊரிலோ அல்லது பிரயாணத்தின்போதோ உங்கள் அருகாமையில் வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை நீங்கள் சந்திக்க நேரிடலாம்.

அவர்களிடையே சிறுவர் துஷ்பிரயோகிகளும் இருக்கலாம்.

### விழிப்போடு இருங்கள்

சுற்றுலா பயணிகள் சிறுவர்களுக்கு பரிசு பொருட்கள் கொடுக்கிறார்களா அல்லது நெருங்கி பழகுகிறார்களா என்பதை அவதானியுங்கள்.

சுற்றுலா பயணிகளால் பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளே அதிகமாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இதனால் சிறுவர்கள் உடல், உள ரீதியாக பாதிப்பிற்கு உள்ளாவதோடு அவர்களுக்கு (எயிட்ஸ் போன்ற) நோய்களும் ஏற்படலாம். மேலும் அவர்களது கல்வி பாதிப்படையலாம்.

வளர்ந்தவர்களாக வந்த பின்னும் குடும்ப வாழ்க்கையில் பிரச்சினைகள் வரலாம்.


துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட சிறுவர்களை நீங்கள் கண்முன்னே காணாவிட்டாலும், அதிகமானவர்கள் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

**எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு**
**(PEaCE / ECPAT Sri Lanka)**
இல. 165/2 துட்டுகெமுனு வீதி, கொஹுவல

| | |
|---|---|
| தொலைபேசி | : 011 281 9397 |
| கையடக்கத் தொலைபேசி | : 070 550 7121 |
| தொலைநகல் | : 011 276 8862 |
| மின்னஞ்சல் முகவரி | : report@ecpatsrilanka.org |


# சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான இலகு வழிகாட்டல்

**பெற்றோர் தெரிந்து கொள்ள வேண்டியது**
**காலத்தின் தேவை**



PEaCE

**எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு**
**(PEaCE / ECPAT Sri Lanka)**

ecpat

**இல. 165/2 துட்டுகெமுனு வீதி, கொஹுவல.**

## உங்கள் பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள்

அன்பான பெற்றோர்களே! சகோதர சகோதரிகளே! நீங்கள் உழைத்து பாடுபடுவது உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்திற்காகவே.


சிறுவர் பராயத்திலேயே பிள்ளைகள் தீமையான விடயங்களை பார்க்கவும் கேட்கவும் நேரிடுகின்றது. இந் நிலையில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு முகம் கொடுக் கும் ஆபத்தான நிலையும் அவர்களுக்கு ஏற்படுகிறது.

எந்த இடத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும், எந்த நேரத்திலும்-அறிமுகமானவர், அறிமுகமற்றவர், இளை யவர், முதியவர், ஆண், பெண் என்ற எவ்வித பேதமும் இன்றி எவராலும் உங்கள் பிள்ளைகள் துஷ்பிரயோகத் திற்கு உள்ளாக்கப்படலாம்.



## தகாத வகையிலான தொடுகை

கீழே படத்தில் குறிப்பிட்டுள்ள உடல் உறுப்புக்களை யார் தொடுவதாயினும் அது குற்றமாகும். அம்மா மற்றும் அம்மாவின் முன்னிலையில் வைத்தியர் தொடலாம்.



உங்கள் பிள்ளைகளை இவ்வாறான நிலையிலிருந்து பாதுகாப்பதற்கு, அவர்களை யாராவது தகாத வகையில் தொட்டால் அல்லது தொட முயற்சித்தால் கீழ்காணும் விடயங்களை செய்யும்படி அவர்களிற்கு ஆலோசனை வழங்குங்கள்.

- உரக்க சத்தமிடுங்கள்
- பலர் இருக்கும் இடத்தை நாடி ஓடுங்கள்
- உதவி கோருங்கள்
- நம்பிக்கையான ஒரு பெரியவரிடம் கூறுங்கள்
- இவ்வாறான சம்பவத்தை இரகசியமாக வைத்திருக் காதீர்கள்
- உங்களுக்கு விருப்பமில்லாத அருவருப்பான முறை யில் யாராவது நடக்க முயற்சித்தால் அதற்கு உடனடி யாக எதிர்ப்பை தெரிவியுங்கள்



## இளவயது திருமணம்

- இலங்கை குற்றவியல் சட்டத்தின் படி 18 வயதிற்கு குறைந்தவர்களுக்கு திருமணம் செய்வதோ அல்லது திருமணப் பதிவு செய்வதோ குற்றமாகும்.

  அப்படியே திருமணம் நடைபெற்றால்

- அத்திருமணம் செல்லுபடியாகாது
- கல்வி பாதிக்கப்படும்
- உடல் நலம் சீர்குலையும்
- இனிமையான சிறுவர் பராயத்தை இழக்க நேரிடும்
- அவ்வாறான ஒரு திருமணத்தை பதிவு செய்யும் திருமண பதிவாளார் மற்றும் இரு தரப்பு பெற்றோர் களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படலாம்
- மேலும் பெற்றோர் மற்றும் உதவி புரிந்தோருக்கு 9 முதல் 20 வருடம் வரையிலான கடூழிய சிறை தண்டனை வழங்கப்படலாம்.

